OPEN ACCESS

Manuscript ID:
TAM-10042026-10715

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.02.2026

Accepted: 26.03.2026

Published: 01.04.2026

Citation:
Natarajan, A. "Cultural Traditions of Sangam People in Pattinapalai." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 31–40.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10715

*Corresponding Author:
natarajan.lingu@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Cultural Traditions of Sangam People in Pattinapalai

A. Natarajan
Assistant Professor, Department of Tamil
Dhanalakshmi Srinivasan University, Tiruchirappalli, Tamil Nadu, India
http://orcid.org/0009-0006-9803-7769

Abstract

When viewed in accordance with the statement that literatures are a mirror of time, a literary work can be understood as one that reflects not only the economic conditions, environment, and political factors prevailing at the time of its creation, but also the cultural way of life of the people. The purpose and nature of literatures can be considered as those that structure and present within themselves all the dimensions of the period in which they were created. In that regard, the Sangam literatures — Ettuthogai and Pathupattu — defined as the earliest literatures available in the history of Tamil literature, are seen to have explained cultural values such as the political, economic, and social structures of the Tamil people at various levels. Among these, Pattinappalai, one of the works in the Pathupattu series, was composed by Kadiyalur Uruthirangkannar to celebrate the greatness of the Chola king Karikala Peruvalathan. Nevertheless, cultural ideas are seen to be explained throughout the entirety of the literary work. This literature, which begins with the glory of the Kaveri River, is composed in a manner that praises Karikala Chola's greatness, his prowess in war, and the methods by which he built his kingdom. Since it was composed following the Palai Thinai discipline within the Agathhinai tradition, the author Uruthirangkannar named this work Pattinappalai. Culture may be defined as the expansion of antiquity and its continuation through tradition. Just as literature and grammar are produced by human beings, culture too can be defined as something that has emerged and grown through human creation. Thus, this research article examines and explains in detail the cultural ideas embedded in the work — including the Tamil tradition of weather prediction as described by the author, the unity of the people, the occupational status in cultural tradition, the cultural lifestyle of merchants, a theft-free way of life, games in Tamil culture, and festivals.

Keywords: *Pattinappalai, Culture, Tradition, Way of Life.*

References

1. Aiyanar, Su. "Cultural Traditions in Sangam Literatures." International Research Journal of Tamil Language and Literature, E-ISSN: 2581-7140, Vol-1, Issue-1, July 2018.
2. Ilampuranam. Tholkappiyam Porulathigaram. Kazham Publications, Chennai, 1969.
3. Ragavaiyyangar, Ra. Pattinappalai Research and Commentary. Annamalai University, Annamalai Nagar, First Edition - 1951.
4. Kalanidhi Pushpa Kristy. "Sociological Cultural Thoughts." Pathivugal, E-ISSN: 1481-2991, Issue – 134, January 2024.
5. Kasthuri, Mu. Dr. "Cultural Elements in Pathupattu: Food Practices." Kalanjiyam International Education and Research Journal, E-ISSN: 2456-5148, Vol-2, Issue – 1, November 2024.

6. Karthigaiyini, Vi. "Festivals in Sangam Literatures." International Research Journal of Tamil Language and Literature, E-ISSN: 2581-7140, Vol-2, Issue-4, July 2019.
7. Sakthidasan Subramanian. Classical Literary Treasury - Sangam Literature Kurunthogai. Tamilman Charitable Trust, Chennai, First Edition - 2008.
8. Subramanian, Sa.Ve. Tholkappiyam - Nacchinarkiniyar Commentary. Meyyappan Pathippagam, Chidambaram, Second Edition - 2009.
9. Duraisamipillai, Su. Avvai. Seevaga Chinthamani - Abridged with Commentary Notes. Kazham Publications, Chennai, First Edition - 1941.
10. Duraisamipillai, Su. Avvai. Purananuru Part One. Poompuhar Pathippagam, Chennai, First Edition - 2009.
11. Nagarajan, Vi. Dr. Sangam Literature Pathupattu Part 2. New Century Book House (P) Ltd, Chennai, Third Edition - 2007.
12. Bakthavatchala Bharathi. Cultural Anthropology. Adaiyalam Pathippagam, Chennai, First Edition - 2016.
13. Paramasivanandam, A.Mu. Society and Culture. Tamilkalai Pathippagam, Chennai, First Edition - 1962.
14. Riswana Parveen, Sa. Thirumathi. "Trade Information in Pattinappalai." International Research Journal of Tamil Language and Literature, E-ISSN: 2581-7140, Vol-1, Issue-1, July 2018.

பட்டினப்பாலையில் சங்ககால மக்களின் பண்பாட்டு மரபுகள்

அ. நடராஜன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

ஆய்வுச்சுருக்கம்
சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழர்களின் அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு போன்ற பண்பாட்டு விழுமியங்களை பல நிலைகளில் விளக்கியுள்ளதைக் காணமுடிகிறது. பத்துப்பாட்டு நூல் வரிசையில் ஒன்றானப் பட்டினப்பாலை கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் சிறப்பை எடுத்து இயம்பும் வண்ணம் பாடப் பெற்றிருப்பினும், பண்பாட்டுக் கருத்துக்களை இலக்கியம் முழுமையும் விளக்கியுள்ளமை புலப்படுகின்றன. காவிரியாற்றின் சிறப்போடுத் தொடங்கும் இவ்விலக்கியம் கரிகால் சோழனின் சிறப்பு, போர்த்திறம், தம் நாட்டைக் கட்டமைத்த முறைகளைப் போற்றிப் பாடும் வகையில் படைக்கப்பட்டுள்ளது. அகத்திணை ஒழுக்கத்தில் பாலைத்திணை ஒழுக்கத்தைக் கொண்டு பாடப்பட்டதால் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் இவ்விலக்கியத்திற்குப் பட்டினப்பாலை எனப் பெயர் இட்டுள்ளார். ஆசிரியரால் விளக்கப்பட்டுள்ள வானிலையைக் கணிக்கும் தமிழர் மரபு, மக்களின் ஒற்றுமை நிலை, பண்பாட்டு மரபில் தொழில் நிலை, வணிகர்களின் பண்பாட்டு வாழ்க்கை முறை, களவு அற்ற வாழ்க்கை முறை, விளையாட்டுக்கள், விழாக்கள் உள்ளிட்ட பண்பாட்டு கருத்துக்கள் உள்ளதன் நுணுக்கமாக ஆராய்ந்து விளக்குவதாக இவ்ஆய்வு கட்டுரை அமைகிறது.

குறிப்புச்சொற்கள்: *பட்டினப்பாலை, பண்பாடு, மரபு, வாழ்வியல், திறனாய்வு, சங்க இலக்கியம், பத்துப்பாட்டு.*

முன்னுரை

இலக்கியங்கள் காலக்கண்ணாடி என்ற கூற்றின் அமைவுடன் நோக்கும்கால், ஓர் இலக்கியம் தான் தோன்றிய காலத்தில் நிலவியப் பொருளாதாரம், சுற்றுச்சூழல், அரசியல் போன்ற காரணிகளுடன் மக்களின் வாழ்வியலானப் பண்பாட்டையும் இயம்புவதாக பொறுத்தலாம்.

> **மனிதன் தனது சுற்றுச் சூழலைத் தனக்கேற்ப மாற்றித் திருத்தி தனது புற வாழ்வியலை ஒழுங்குப்படுத்தித் திட்டமிட்டுச் செய்யும் செயல்கள், வாழ்க்கைப் பற்றிய நம்பிக்கைகள், சடங்கு மதிப்புகள், சமூகக் கருத்துக்கள் அடங்கிய கூறுகள் பண்பாடு எனப்படும்.**
> ***(சு. அய்யனார், பக்.1)***

இலக்கியங்களின் தேவையும், தன்மையும் அவ்விலக்கியம் தோன்றிய காலகட்டத்தின் அனைத்து நிலைகளையும் தன்னுள் கட்டமைத்துக் காட்டுவனவே எனக் கொள்ளலாம். அவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கியங்களாக வரையறுக்கப் பெறும் எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் தமிழர்களின் அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு போன்ற பண்பாட்டு விழுமியங்களைப் பல நிலைகளில் விளக்கியுள்ளதைக் காணமுடிகிறது. இவற்றில் பத்துப்பாட்டு நூல் வரிசையில் ஒன்றானப் பட்டினப்பாலை, கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் சிறப்பை எடுத்து

இயம்பும்வண்ணம் பாடப் பெற்றிருப்பினும், பண்பாட்டுக் கருத்துக்கள் இலக்கியம் முழுமையும் விளக்கியுள்ளமை புலப்படுகின்றன.

பண்பாடு பொருள் விளக்கம்

பழமையின் விரிவாக்கமும், மரபு வழியானத் தொடர்ச்சியும் பண்பாடு எனலாம்.

> **பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. (பக்தவத்சல பாரதி, பக். 148)**

இலக்கிய, இலக்கணங்கள் எவ்வாறு மனிதனால் விளைவிக்கப்படுகிறதோ அவ்வாறே பண்பாடும் மனிதனின் உற்பத்தியால் விளைந்து வளர்ந்து வந்தவையாக வரையறுக்கலாம்.

> **பண்பாடு என்பது மக்களால் ஆக்கப் பெற்றக்கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்கின்றனர்.**
>
> **(பக்தவத்சல பாரதி, பக். 148)**

பண்பாடு என்றால் என்ன எனும் கேள்விக்கு விடை தேடினால், அது மக்கள் தமது சமூக வரலாற்று வளர்ச்சியைத் தோற்றுவிக்கும் பௌதீகப் பொருட்கள், கருத்துக்கள், மத நம்பிக்கைகள், சமூக பெறுமானங்கள் என்பனவாகும்.

(கலாநிதி புட்பா கிறிட்டி, பக். 1)

பண்பாடு என்ற சொல்லிற்கு லியோ தமிழ் அகராதி

> **மக்கள் சிந்தனை வெளிபாடு**
>
> **(அ. து. மூர்த்தி, பக். 442)**

என விளக்கம் தருகிறது. எவ்வகையிலும், பண்பாடு என்ற அமைப்பைக் காணும் போது, மக்களையே மையமிட்டு நிற்பதை அறியலாம்.

சங்க இலக்கியங்களில் பட்டினப்பாலை

தமிழ் இலக்கியங்களில் கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் சங்க காலமே தமிழ் இலக்கியங்களின் தொடக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளன. அக்காலகட்டத் தமிழ் இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் ஆகும். எட்டுத்தொகை நூல்கள் பல புலவர்களால் பாடப்பட்ட தொகுப்பு என்பதால், அவற்றுள் புற இலக்கியங்கள் சேர, சோழ, பாண்டியர்களில் பலரையும் பற்றிய பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. மேலும் இப்பகுப்புப் பாடல்களில்,

> **குறிஞ்சி, பாலை முதலிய ஐவகை நிலங்களில் தலைமக்கள், பொது மக்கள் என்ற இரண்டே பிரிவுகள் இருந்தன. பெரிய நகரங்ளில் மட்டும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் பல வகை தொழிலாளர்கள் என்ற பிரிவினர் இருந்தனர். (மு.கஸ்தூரி, பக். 4)**

பத்துப்பாட்டில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனிப் புலவர்களால் பாடப்பட்டுள்ளதால் ஒவ்வொரு இலக்கியமும் வெவ்வேறு அரசர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. அவ்வகையில் கரிகால் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ள பட்டினப்பாலை. இலக்கிய வரிசையில் ஒன்பதாம் இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறது. கரிகால் சோழனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொருநராற்றுப் படையும், பட்டினப்பாலையும் இயற்றப் பட்டுள்ளன.

பட்டினப்பாலையின் அமைப்பு முறை

காவிரியாற்றின் சிறப்போடுத் தொடங்கும் பட்டினப்பாலை கரிகால் சோழனின் சிறப்பு, போர்த்திறம், தம் நாட்டை கட்டமைத்த முறைகளைப் போற்றி பாடும் முறையில் படைக்கப்பட்ட இலக்கியம். அகத்திணை ஒழுக்கத்தில் பாலைத்திணை ஒழுக்கத்தைக் கொண்டு பாடப்பட்டதால் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் இவ்விலக்கியத்திற்குப் பட்டினப்பாலை எனப் பெயர் இட்டுள்ளார். பெயர்க்காரணங்களுடன் படைக்கப்பட்டுள்ள இவ்விலக்கியத்தை அவற்றில் இடம்பெறும்

பாடல்வரிகளின்கருத்துக்களைக்கொண்டுஅதன் அமைப்பை வகைபடுத்திக்காட்டலாம்.

பாடல் அடி அமைப்பு முறை

(பாடலின் அடிவாரியாக கருத்தமைவு)

1 - 7	காவிரியாற்றின் சிறப்பு
8 - 29	சோழநாட்டின் சிறப்பு, பாக்கம், ஊர்ச்சிறப்பு
30 - 32	பண்டமாற்று முறை (உப்பு, நெல்) மாற்று முறை
33 - 39	பூஞ்சோலை, பொய்கை, ஏரிச் சிறப்பு
40 -50	கோட்டைக் கதவுகள், அட்டில் சாலை சிறப்பு
51 - 76	வேள்விச் சாலை, தவப்பள்ளிச் சிறப்பு
77 - 105	பரதவர், மீன்துறை மற்றம் அவர்களின் வாழ்வியல் முறை
106 - 119	மாளிகைகள் அமைப்பு, காதல் வாழ்க்கை
120 - 141	பண்டகசாலையின் அமைப்பும், சிறப்பும்
142 - 158	பெண்களின் அழகு, பெண்களின் இறைவழிபாடு
159 - 183	பல வண்ணக் கொடிகள் அமைக்கும் வழக்கம்
184 - 193	துறைமுகம், கடல் வணிகத்தின் சிறப்பு
194 - 212	வணிகர்களின் சிறப்பு
213 - 218	பல மொழி பேசுவோர் கூடிவாழும் சிறப்பு
218 - 220	தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறல் (அகம் சார்ந்த செய்தி)
221 - 298	கரிகால் சோழன் அரசுரிமை பெற்றமை, பகைவர் மேல்

போருக்குச் சென்று, வென்று அந்நாட்டை அழித்தமை,

கரிகால் சோழனின் தனிச்சிறப்பு, உறையூரை விரிவுபடுத்தி

மக்களைக் குடிபெயர்த்த நிலை

299 - 301 கரிகால் சோழனின் வெற்றிச் சிறப்பும், செங்கோல் சிறப்பும், தலைவன் தன் நெஞ்சுக்கு கூறியதும்.

வானிலையைக் கணிக்கும் தமிழர் மரபு

உலகம் நிலம், நீர், காற்று, வளி, விசும்பு ஆகிய ஐந்தால் ஆனது என்பதை,

நிலம்தீ நீர்வளி விசும்பொ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
(தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா. 635)

எனும் நூற்பாவின் வழி தொல்காப்பியம் விளக்குகிறது. தமிழர்களுக்கு உலகம் மற்றும் வானிலைப் பற்றிய அறிவு முழுமையாகவே இருந்துள்ளதைத் தொல்காப்பியம் மட்டுமின்றி தமிழில் தோன்றிய இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலை மழை வரும் சூழலை வானில் காணும் நட்சத்திரங்களின் அமைப்பைக் கொண்டு தமிழர்கள் கணித்துள்ளதை,

வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
வானிலையைக் கணிக்கும் தமிழர் மரபு
(பட்டினப்பாலை, பா. 1-5)

எனக் கீழ்வானில் தோன்றும் வெள்ளி கோள்மீன் வடக்கில் நின்றால் மழை வரும். ஆனால், அவ்வெள்ளி கோள் திசை திரிந்து தெற்கில்நின்றால்மழைப்பொழிவுக்குதடை ஏற்பட்டு மழை விலகிச் சென்றுவிடும் என விளக்குகிறது. இக்கருத்தினை ஆய்ந்து காணும்போது பண்டையத் தமிழர்களின் மரபில்வானிலையைக்கணித்துசெயல்படும் மரபு இருந்துள்ளமையோடு, தமிழர்களின் பண்பாட்டு மரபில் வானிலையும் ஒன்றாக அமைவதைக் காணமுடிகிறது.

பண்பாட்டு வளர்ச்சியில் தொழில் நிலையும், பொருளாதார வளர்ச்சியும்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியலை அகம்புறம் எனப் பகுத்துப் பல கருத்துகளை மீட்சிசெய்து காட்டுவதோடு

வேளாண்மை, வணிகம் உள்ளிட்டத் தொழில் நிலையின் சிறப்பான செயல்பாட்டால் வளமானப் பொருளாதார வளர்ச்சியும் பெற்றிருந்தனர் என்பதையும் விளக்குகின்றன. பொருளாதார வளர்ச்சியை அகன்ற கரும்பாலையில் முற்றிய கரும்புகளின் சாறு காய்ச்சசப்படும். அதன் பாகின் மணம் எங்கும் கமழும் எனப் பட்டினப்பாலை விளக்குகிறது. இதனைப்போன்றே கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் புகை சூழ்ந்த கொட்டில்கள் நிறைந்த ஆலைகள் என்று பெரும்பாணாற்றுப்படையும் இச்செய்தியை எடுத்துக் கூறகிறது. இதன் சிறப்பால் தொழில்நிலை மேம்பட்டதோடுபொருளாதாரமும் பெற்ற மக்களாகத் தமிழர்கள் சங்ககாலத்தில் இருந்தனர் என்பதை அறியலாம்.

நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
முக்காற் சிறுதேர் முன் வழி விலக்கும்
(பட்டினப்பாலை, பா. 22-25)

என வெய்யிலில் உலரும் தானியங்களை உண்ண வரும் கோழியை மகளிர் தங்கள் காதுகளில் அணிந்திருந்த பொன் குழையை விட்டெறிந்து விரட்டினர் என ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தமிழர் மரபைக் காணுங்கால் தொழில் சிறப்போடு பொருளாதார வளமும் நிரம்பப் பெற்ற சிறந்த மரபினராக விளங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

பட்டினப்பாலை காட்டும் மக்களின் ஒற்றுமை நிலை

பண்பாடு என்பது புறத்தோற்றத்தைப் பற்றியது, அகத்தைப் பற்றியது என பல விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றில் தனித்து வாழ்ந்த மனிதர்கள் ஒன்றுபட்டு வாழ்வதும் பண்பாடே என்பதை

மனிதனை இணைத்து வைத்ததே பண்பாடுதான்
(அ.மு.பரமசிவானந்தம், பக். 198)

எனத் தனது நூலில் விளக்கியுள்ளார். இக்கருத்தினையே பட்டினப்பாலையும் மக்கள் ஒன்றுபட்டு பண்பாட்டுடன் வாழ்ந்தனர் என்பதை

விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா
கொழும் பல்குடிச் செழும் பாக்கத்து
குறும் பல் ஊர் நெடுந் சோனாட்டு
(பட்டினப்பாலை, பா. 26-28)

வெய்யிலில் உலர்த்தப்படும் தானியங்களை உண்ண வரும் கோழிகளை விரட்ட பெண்கள் தங்கள் காதுகளில் அணிந்துள்ள குழையினைக் கழற்றி விட்டெறிந்தனர். அக்குழைகள் சிறுவர்கள், சிறுதேர் கொண்டு விளையாடும் போது அவ்வோட்டத்தினைத் தடைபோல் தடுக்கும். இவ்வாறான தடைகள் மட்டுமே உண்டு. புகார் நகரில் வாழும் மக்களுக்கு வேறு தடையோ, பகையோ எதுவுமின்றி ஒற்றுமையாகப் பண்பாட்டுடன் வாழ்ந்ததாக விளக்குகிறது.

பண்பாட்டு மரபில் தொழில் நிலை

பட்டினப்பாலையின் கதைக்களமாக வரையறுக்கப்பட்டுள்ள காவிரிப்பூம்பட்டினம் துறைமுக நகரமாதலால் தொழில்கள் சிறப்புற்று விளங்கியுள்ளதைச் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை கொண்டு விளங்கிக் கொள்ளலாம். அவ்வகையில் ஏற்றுமதி, இறக்குமதியின் இரு பிரிவுகளாக உள்நாட்டு ஏற்றுமதி நிலத்தின் வழியாகவும், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி நீரின் வழியாகவும் நடந்த புகழ்மிக்க நகரம் காவிரிப்பூம்பட்டினம் எனப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதற்கு சான்றாக உமணர்கள் வெண்ணிறமுடைய உப்பின் விலையைக் கூறி விற்றுத் தமிழர்களிடமிருந்து பெற்ற நெல்லை ஏற்றிச்சென்றனர் என்பதை

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லோடு வந்த வால்வாய்ம் பஃறி
(பட்டினப்பாலை, பா. 29-30)

என்ற பாடல் விளக்குகிறது. இக்கருத்தினையே

தென்கழி வினாந்த வெண்கல் உப்பின்
(அகநானூறு, பா. 140)

என்று அகநானூறு பாடலும் எடுத்துரைக்கிறது. உப்பு விற்று நெல் ஏற்றி சென்ற செய்திகள் சங்க காலத்தில் தமிழர்கள் ஒரு ஒழுங்கமைவுடன் வணிகம் செய்தனர் என்பதை விளக்கி நிற்கின்றன. மேலும் வணிகத்தின் சிறப்பாக முறையான சுங்கம் பெற்று வியாபாரம் செய்தனர் என்பதை

தொல் இசைத் தொழில் மாக்கள்
உல்கு செய்க் குறை படாது
(பட்டினப்பாலை, பா. 121-125)

எனத் தினமும் கதிர் வீசக்கூடிய கதிரவன் போல ஒருபொழுதும் சோர்வின்றி, இளைப்பாராமல் நாள்தோறும் வணிகத் தொழிலின் ஒருபகுதியாகச் சுங்கம் பெற்றதாக பட்டினப்பாலை ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களுக்குச் சுங்கம் பெற்ற மரபை விளக்குகிறது.

சுங்கம் வசூலிக்கும் ஆட்களே உண்மை ஊழியர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் நடுநிலையிலிருந்து சுங்கம் வாங்குவார்கள். கையுறை (லஞ்சம்) வாங்கமாட்டார்கள். தங்களுடைய வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வார்கள். அவர்களை யாரும் ஏமாற்றிவிட முடியாது.
(சா. ரிஸ்வானா பர்வீன், பக். 61)

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் கொண்டு வரப்பட்ட பொருள்கள், சீனா முதலான பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள் யாவும் அழிந்து விடாமல் பாதுகாத்து வைப்பதற்கான இடமும், அதற்கான காவல் யாவும் நிறைந்த தொழில் நகரமாக காவிரிப்பூம்பட்டினம் காணப்பட்டதால், அகன்ற தெருக்களில் அளவிட்டுக் கூற இயலாத பொருள்கள், மிகுதியாக கடைகள் அமைத்து வியாபாரம் செய்தனர் என்று தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பை எடுத்துரைக்கிறது.

வணிகர்களின் பண்பாட்டு வாழ்க்கை முறை

பட்டினப்பாலை வேளாண்மை செய்வோர், பரதவர்கள் மற்றும் வணிகர்களின் வாழ்வியல் முறையைப் பற்றி விளக்கும் போது ஒவ்வொரு பிரிவு மக்களுக்கான வாழ்வியலை அவர்களின் பண்பாடகவே எடுத்தியம்புகிறது அவ்வகையில் வணிகர்களைப் பற்றிக் கூறும்போது,

நெடு நுகத்துப் பகல் போல
கொள்வதூஉம் மிகைகொள்ளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது.
(பட்டினப்பாலை, பா. 201-205)

உழவுத் தொழிலை விரும்பிச் செய்யும் உழவர்களின் உழவிற்குப் பயன்படுத்தப்படும் ஏர்கலப்பையின் நுகத்தடியின் நடுவில் பொருத்தப்பட்டுள்ள பகலாணி இருபுறம் நடுவு நின்று சுமையைச் சரியாகப் பிரித்து கொடுப்பதுபோல, வணிகர்களும் நடுவு நிலை என்ற குணம் மாறாமல் வணிகம் செய்தனர். தம் பொருட்கள், பிறர் பொருட்கள் என வேறுபடுத்தி காணாமல் ஒன்றாக எண்ணித் தொழிலில் மரபுடன் செயல்பட்டனர் என்று பட்டினப்பாலை வணிகர்கள் பண்பாட்டு மரபுடன் ஈடுபட்டதை எடுத்து விளக்கியுள்ளது.

களவு அற்ற வாழ்க்கை முறை

சிறந்த பண்பாட்டு பின்புலத்திற்கு, மக்கள் உண்மையாகவும், நேர்மை தவறாமல் வாழ்ந்தனர் என்பதோடு களவுத் தொழில் அற்ற சமூகமாகவும் வாழ்வதை அம்மக்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக விளக்கலாம். பட்டினப் பாலையில் உருத்திரங்கண்ணனார்

தி நிறைந்த மலி பண்டம்
ஏழகத் தகரோடு உகரும் முன்றில்
(பட்டினப்பாலை, பா. 136-140)

என எவ்வித பாதுகாப்புமின்றி பண்டக சாலையில் பொருள்கள் குவித்து வைத்துள்ள பொதிகள் மீது ஆண் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறி விளையாடுமேதவிர பொருள் களவிற்கு இடம் இல்லை என்பதோடு பொருள்கள் வைத்ததுபோலவே, பாதுகாப்பு இல்லாவிட்டாலும் இருந்துள்ளன என்பதையும் ஆசிரியர் வரையறுத்து விளக்கியுள்ளமை

நோக்குதற்கு உட்படுகிறது. இதனையே புறநானூறும்

களமலி குப்பை காப்பில வைகளம்
(புறநானூறு, பா. 230)

களத்தில் நிறைந்து கிடக்கம் நெற்பொலி காவல் இல்லாமல் கிடப்பினும் பாது காப்பாகவே இருந்தன என்பதை பாடல் வரி விளக்குகிறது. இதன் அடிப்படையில் காணின் தமிழ் மக்கள் சங்க காலங்களில் களவு தொழில் அற்ற பண்பாட்டுடனான வாழ்வை மேற்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

தமிழ்ப் பண்பாட்டில் விளையாட்டுக்கள்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டு மரபுகளை எடுத்தியம்புதல்களில் விளையாட்டுகளும் ஒன்றாக உள்ளது. திணைக்குடிகளுக்கு ஏற்ப விளையாட்டிலும் மாறுதல்கள் காணப்படுவதை ஐவகைத் திணைப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலை நெய்தல் நில திணை மக்களின் வாழ்வியலைக் காட்டுவதுடன் அப்பகுதியில் வாழும் பரதவ மக்களின் பண்பாட்டு மரபுகளை விளக்கும் வகையில் அம்மக்களின் பகல், இரவு விளையாட்டுகளையும் எடுத்துக் கூறுகிறது. அவ்வகையில் நிலவு நிறைந்த பௌர்ணமி நாளில் பரதவர் இன ஆண்கள் தங்கள் தொழிலான மீன்பிடி தொழிலுக்குச் செல்லாமல் தம் மகளிருடன் கடற்கரையில் சுறாமீனின் கொம்பை நட்டு, அதில் தங்கள் தெய்வம் இருப்பதாக எண்ணி தாழைப்பூ மாலை அணிந்து, பனைமர கள்ளினை உண்டு விளையாடுவர். இதனூடே பரதவ இன சிறுவர்களின் விளையாட்டுகள் பற்றி விளக்குகையில் கடற்கரை மணல் பரப்பில், கடலில் வாழும் இறால் மீன்களைப் பிடித்துச் சுட்டுத் தின்றும், மணலில் படர்ந்து கிடக்கும் அடம்பின் பூவினைத் தலையில் சூடிக்கொண்டு அதனுடன் ஆம்பல் பூக்களையும் சூடிக்கொண்டு, ஆட்டுக்கிடாய் சண்டையும், கௌதாரிப் பறவைகளை சண்டையிட விட்டும் மகிழ்ந்தனர் என விளக்குகிறது. மேலும் மரங்களில் உறையும் பறவைகளைக் கவணில் கல் வைத்து வீசி எறிந்தும் விளையாடுவர் எனச் சிறுவர்கள் விளையாட்டுகளைப் படம் பிடித்து காட்டியுள்ளார் ஆசிரியர். காவிரிப்பூம்பட்டின மக்களின், குறிப்பாக பரதவ இன மக்களின் விளையாட்டான, கடற்கரை மணற்பரப்பில் விளையாட்டு, கடல் சார்ந்தப் பொருள்கள் கொண்டு விளையாட்டு என விளக்குவதன்வழி அம்மக்கள் தாங்கள் திணை நிலத்தையே மையமிட்டு திணைக்குடிகளாகவே இருந்துள்ளதை பட்டினப்பாலை எடுத்துக் காட்டுகிறது. இக்கருத்தினையே,

முழு முதல் அரைய தடவுநிலைப் பெண்மணக்
கொழு மடல் இழைத்த சிறுகோல்
குடம்பைக் கருங்கால்அன்றில்
(குறுந்தொகை, பா. 301)

என்று குறுந்தொகையும் விளக்குகிறது. தமிழர் பண்பாட்டு மரபில் திணை சார்ந்த விளையாட்டுக்கள் பெரும் அளவில் போற்றப்பட்டுள்ளமை இதன்வழி அறியமுடிகிறது.

பட்டினப்பாலை உணர்த்தும் தமிழர்ப் பண்பாட்டில் விழாக்கள்

தமிழர் மரபில் விழாக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி முன்னெடுக்கும் வழக்கு சங்க காலம் முதலே இருப்பதை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சங்க இலக்கியங்களில் சங்க காலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில சமயம் தொடர்பானவை, சில சமூகம் தொடர்பானவை. விழாக்களின் போது பாணரும் கூத்தரும், ஆடியும், பாடியும் மகிழ்வித்தனர். நகரங்கள் சில விழவு மேம்பட்டழவிறல் மூதூர் என்று பாரட்டப் பட்டுள்ளனர். (வி. கார்த்திகாயினி, பக். 39.)

அவ்வகையில் மகளிர் வெறியாடி விழாக் கொண்டாடினர்.

வெறி ஆடு மகளிரொடு செறியத் தாஅய்
குழல் அகவ, யாழ் முரல,
முழவு அதிர முரசு இயம்ப
விழவு அறா வியல் ஆவணத்து
(பட்டினப்பாலை, பா.155-158)

என்ற பாடல் வரிகள் மூலம் வெறியாட்டு எடுத்தற்குரிய முருகனுக்கும், பிறப்பு அறுதற்குக் காரணமாகிய தெய்வங்களுக்கும் புகார் நகரிலே விழாக்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும், அவ்வேளையில் மகளிரின் பாடல்களுக்கு ஏற்பத் துளைக் கருவியாகிய குழல், நரம்பு கருவியாகிய யாழ், தோல் கருவியாகிய முழவு, முரசு என இசைக்கருவிகள் ஒலிக்க புகார் நகரின் அகன்ற வீதியில் மக்கள் நீங்காமல் விழாக்கள் நடைபெறும் என்பதை, ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் விழாவின் முக்கியத்துவத்தை பட்டினப்பாலை வழியாக எடுத்து விளக்கியுள்ளார்.

முடிவுரை

பண்பாடு என்பது பல கூறுகளின் ஒன்றுபட்ட தொகுப்பு என்பதை ஆய்வின் வழி விளக்கமுடிகிறது. பண்பாட்டு விழுமியங்கள் ஒவ்வொன்றும் கிளைத்து விரிவாக்கம் பெறுவதே இலக்கியங்களின் பொருண்மைக்கட்டமைப்பாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. பட்டினப் பாலைத் தமிழர்களின் பண்பாட்டு களஞ்சியம் எனலாம். இலக்கியம் முழுவதும் ஐம்பூதங்களின் நிலைப்பாட்டை அறிதல், அறம் பிறழாமல் தொழில் செய்தல், மக்கள் ஒற்றுமையுடன் வாழ்தல், குறிப்பாகப் பல மொழி பேசுவோராயினும் ஒன்றுபட்டிருத்தல், சங்ககால மக்களின் விளையாட்டுகள், விழாக்கள் போன்ற கருத்துகளுடன், எதிர் நாடாயினும் போர் என்றால் முறையான முன்னறிவிப்புடன் செல்வது உள்ளிட்ட பண்பாட்டு மரபுகள் விரவி விளக்கப்பட்டுள்ள இலக்கியமாகப் பட்டினப்பாலை திகழ்கிறது.

துணைநூற்பட்டியல்

1. அய்யனார், சு. சங்க இலக்கியங்களில் பண்பாட்டு மரபுகள். தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டுஆய்விதழ், E & ISSN: 2581-7140, தொகுதி-1, இதழ்-1, சூலை 2018.
2. இளம்பூரணம். தொல்காப்பியம் பொருளதிகாரம். கழகவெளியீடு, சென்னை, 1969.
3. இராகவையங்கார், இரா. பட்டினப் பாலை ஆராய்ச்சியும் உரையும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், முதற்பதிப்பு- 1951.
4. கலாநிதி புட்பா கிறிட்டி. சமுதாயவியல் சார்ந்த பண்பாட்டுச் சிந்தனைகள், பதிவுகள், E&ISSN: 1481-2991, இதழ் - 134, ஜனவரி 2024.
5. கஸ்தூரி, மு. முனைவர். பத்துப்பாட்டில் பண்பாட்டுக் கூறுகள்: உணவு முறை, களஞ்சியம் சர்வதேச கல்வி மற்றும் ஆராய்ச்சி இதழ், E&ISSN:2456-5148, தொகுதி -2, இதழ் - 1, நவம்பர் 2024.
6. கார்த்திகாயினி, வி. சங்க இலக்கியங்களில் விழாக்கள், தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E&ISSN: 2581-7140, தொகுதி- 2, இதழ் - 4, சூலை 2019.
7. சக்திதாசன் சுப்பிரமணியன். செவ்விலக்கிய கருவூலம் சங்க இலக்கியம் குறுந்தொகை, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, முதற்பதிப்பு - 2008.
8. சுப்பிரமணியம், ச.வே. தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் - உரை. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு - 2009.
9. துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை. சீவகசிந்தாமணி- சுருக்கம் உரைக் குறிப்புக்களுடன். கழகவெளியீடு, சென்னை,முதற்பதிப்பு -1941.

10. துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை. புறநானூறு முதல்பாகம். பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.
11. நாகராஜன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு பகுதி 2, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2007.
12. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானுடவியல். அடையாளம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2016.
13. பரமசிவானந்தம், அ.மு. சமுதாயமும் பண்பாடும். தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1962.
14. ரிஸ்வானா பர்வீன், சா.திருமதி. பட்டினப்பாலையில் வணிகச் செய்திகள், தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ். E&ISSN: 2581-7140, தொகுதி -1, இதழ்- 1, சூலை 2018.